# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 07 | புவியியல்<br>பெயர் / சுட்டெண் : ................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள உயிரினங்கள் வாழக்கூடிய கோள்
   1) புதன் 2) புவி 3) வெள்ளி 4) செவ்வாய்

02. கிழக்கிற்கும் மேற்கிற்கும் பொதுவான $180^0$ நெட்டாங்கு அழைக்கப்படும் பெயர்
   1) கிறீன்விச் கோடு 2) கடகக் கோடு 3) புவி மத்திய கோடு 4) சர்வதேச கோடு

03. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட கண்டம்
   1) ஆசியா 2) ஐரோப்பா 3) ஆபிரிக்கா 4) வட அமெரிக்கா

04. ஆபிரிக்காக் கண்டத்தின் மேற்கில் அமைந்துள்ள சமுத்திரம்
   1) பசுபிக் சமுத்திரம் 2) இந்து சமுத்திரம்
   3) ஆட்டிக் சமுத்திரம் 4) அத்திலாந்திக் சமுத்திரம்

05. உலகில் மிகவும் ஆழங் கூடிய அகழி
   1) மரியானா 2) மின்டோனா 3) தங்கனிக்கா 4) விக்டோரியா

06. இலங்கையில் உள்ள பிரதேச செயலாலர் பிரிவுகளின் எண்ணிக்கை
   1) 329 2) 25 3) 140 4) 14013

07. அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்
   1) வடக்கு மாகாணம் 2) கிழக்கு மாகாணம்
   3) மேல் மாகாணம் 4) மத்திய மாகாணம்

08. தென்மேல் பருவக்காற்று மூலம் மழை கிடைக்கும் காலம்
   1) மே - செப்ரெம்பர் 2) செப்ரெம்பர் - மே
   3) டிசம்பர் - பெப்ரவரி 4) பெப்ரவரி - டிசம்பர்

09. இலங்கையில் அதிக மழைவீழ்ச்சியைப் பெறும் காலநிலை வலயம்
   1) உலர் வலயம் 2) ஈர வலயம்
   3) வரல் வலயம் 4) அரைகுறை வரள் வலயம்

10. பனை சார் உற்பத்திக்கு சிறப்புப் பெற்ற இடம்
   1) யாழ்ப்பாணம் 2) கண்டி 3) அம்பலாங்கொடை 4) மட்டக்களப்பு

11. குறிப்பிட்ட பிரதேசத்தில் குறுகிய காலத்தினுள் நிலவும் வளிமண்டல நிலைமைகள் அழைக்கப்படுவது
   1) காலநிலை 2) ஈரப்பதன் 3) அமுக்கம் 4) வானிலை

12. பின்வருவனவற்றுள் சேவைக் கைத்தொழில்
   1) சுற்றுலாக் கைத்தொழில் 2) குடிசைக் கைத்தொழில்
   3) சீனிக் கைத்தொழில் 4) இறப்பர்க் கைத்தொழில்



kalvi.lk

13. கொழும்பு - கண்டி பிரதான வீதிகளை இணைக்கும் கணவாய்
1) எல்ல 2) அப்புத்தளை 3) கலதெர 4) பலன

14. பம்பரகந்த, தியலும, லக்சபானா, றம்பொட போன்றன
1) மேட்டு நிலங்கள் 2) எச்சக் குன்றுகள் 3) நீர் வீழ்ச்சிகள் 4) சமவெளிகள்

15. கரையோரச் சமவெளியில் காணப்படாத நிலத்தோற்றம்
1) குடா 2) கணவாய் 3) களப்பு 4) முனை

16. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
1) தலவாக்கல 2) லுனுவில் 3) அகலவத்தை 4) மாதம்பை

17. உலர்வலய பிரதேசத்தில் காணக்கூடிய சிறப்பான பயிர்ச்செய்கை
1) தேயிலைச் செய்கை 2) இறப்பர்ச் செய்கை
3) நெற் செய்கை 4) சேனைப்பயிர்ச் செய்கை

18. நகரப் பிரதேசங்களில் இடப்பற்றாக்குறை காரணமாக அமைக்கப்படும் வீடுகள்
1) குடிசைகள் 2) லயன் வீடுகள் 3) ஓட்டு வீடுகள் 4) அடுக்குமாடி வீடுகள்

19. கடலரிப்பு ஏற்படாமல் கரையோரத்தைப் பாதுகாப்பது
1) கண்டமேடைகள் 2) பிளாங்டன்கள் 3) கடனீரேரிகள் 4) கண்டல்த் தாவரங்கள்

20. கடந்த 2014 இல் மண்சரிவினால் அதிகம் பாதிப்புக்குள்ளான பிரதேசம் எது?
1) கொஸ்லாந்த 2) வெலிமட 3) கற்றன் 4) ஹல்துமுல்ல

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாயமானது. ஏனையவற்றுள் மூன்று வினாக்களிற்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. அ) இரண்டாம் தவணையில் புவியியல் பாடத்தில் மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் இரண்டு தருக.

ஆ) இக் கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகள் எவை?

இ) இக் கணிப்பீட்டுக்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட பொருட்கள் இரண்டு தருக.

ஈ) இக் கணிப்பீட்டின் மூலம் பெற்றுக் கொண்ட நன்மைகள் மூன்று தருக?

( புள்ளிகள்)

02. தரப்பட்ட உலகப் படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டிருப்பவற்றை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டவற்றில் இருந்து தெரிவு செய்து பெயரிடுக.


(றொக்கிமலை, கிறீன்லாந்து, லண்டன், அத்திலாந்திக்சமுத்திரம், கஸ்பியன்கடல், தக்கணமேட்டுநிலம், ஜப்பான், பாக்குநீரிணை, மத்தியகோடு, அமேசன்நதி, மடகஸ்கார், அவுஸ்திரேலியா)

(01 x 12 = 12 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

03.




அ) புவி சிறப்பு வாய்ந்த கோளாக கருதப்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ஆ) நெட்டாங்குகளின் பயன்கள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

இ) இலங்கையின் அமைவிடத்தை அகலாங்கு நெட்டாங்கு அடிப்படையில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

ஈ) மேலே தரப்பட்ட படத்தில் பிரதான அகலாங்குகளை குறித்துப் பெயரிடுக. (05 புள்ளிகள்)

04. அ) உமது பாடசாலை அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவின் பெயரையும் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தையும் மாகாணத்தையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

இ) எமது நாட்டின் நிர்வாக அலகுகளின் படிமுறையைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

ஈ) நிர்வாக நடவடிக்கைக்காக அமைக்கப்பட்ட நிர்வாக அலுவலகங்களில் இருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

05. அ) வானிலை மூலகங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

இ) இலங்கை மழை வீழ்ச்சி பெறும் மூன்று பிரதான வழிகளும் எவை? (03 புள்ளிகள்)

ஈ) இலங்கையின் காலநிலையின் சிறப்பம்சங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

06. அ) தேயிலைச் செய்கைக்கு சாதகமான காரணிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ஆ) தேயிலைச் செய்கையினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நன்மைகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

இ) உலர் வலயத்தில் வரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

ஈ) சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

07. அ) இலங்கையில் உள்ள நகரக்குடியிருப்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)


ஆ) நகரக் குடியிருப்புகளில் காணப்படும் பிரச்சினைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

இ) கண்டல் தாவரங்களின் பயன்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

ஈ) இலங்கையின் கரையோர மீன்பிடிக்கு சாதகமான காரணிகள் நான்கு தருக? (04 புள்ளிகள்)



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන